# அன்பைக் கொண்டாடுவோம் - இறை

அன்பைக் கொண்டாடுவோம் - இறை
அன்பில் ஒன்றாகுவோம்
இந்த உலகில் மனித நலம்
மலர்ந்து மாண்படைய
பண்போடு நாம் வாழுவோம்
நிறை வாழ்வை நாம் காணுவோம் - ( 2 )
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

**1**
பகைமை உணர்வுகளை நாம் களைந்து
பாசத்தைப் புரிந்தே வாழுவோம் - ( 2 )
வேற்றுமை நிலைகளை மதித்திங்கு
ஒற்றுமையுடனே பழகுவோம் - ( 2 )
அன்பிற்கு இலக்கணம் ஆகிடவே
அன்றாடம் உறவுகள் வளர்ந்திடவே
ஒன்று சேர்வோம் உறவில் இணைவோம் - ( 2 )

இறைவன் திருமுன் உலகம் படைப்போம்
(அன்பைக் கொண்டாடுவோம்)

**2**
பாகுபாடுபளை நாம் வெறுத்து
பகிர்விலே சமத்துவம் காணுவோம் - ( 2 )
பிளவுகள் பிணக்குகள் ஓய்ந்திங்கு
பிறரையும் நேசிக்கத் துவங்குவோம்- ( 2 )
உள்ளங்கள் ஒன்றாக இணைந்திடவே
உலகெல்லாம் நிறையன்பு துலங்கிடவே
ஒன்றுசேர்வோம் உறவில் இணைவோம் - ( 2 )

இறைவன் திருமுன் உலகம் படைப்போம்
(அன்பைக் கொண்டாடுவோம்)